**நாள் : 16.12.2022**

## அசல் வழக்கு எண்: 13 /2020

பிசா.-1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

வாதி தரப்பில் வாதி முன்னிலை , என்னால் சத்தியபிரமாண வாக்குமூலம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

என்னுடன் கூடிய பிறந்தவர்கள் 5 பேர்கள். எங்களுக்குள் பாகப்பிரிவினை ஆகிவிட்டது. எனக்கு(1 வேலி) 20 மா நிலம் உள்ளது. வாதிக்கு சொந்தமான நிலத்தைப்பொறத்துதான் இந்தவ ழக்கு நடைபெறகிறது என்று சொன்னால் சரிதான் . வாதி வழக்கு சொத்துக்களுக்கு அருகில் எனக்கு சொத்து இல்லை என்று சொன்னால் சரிதான். நான் வாய்மொழியாகத்தான் வாதியிடம் குத்தகை சாகுபடி செய்தேன் என்று சொன்னால் சரிதான்.

2. நாங்கள் குத்தகை தொகையாக எதுவும் பேசிக்கொள்ளிவல்லை என்று சொன்னால் சரிதான் . நான் 2015 லிருந்து சாகுபடி செய்து வருகிறேன். தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனார் மூலம் கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான் . வாதிக்கம், அவரது குடும்பத்தாருக்கும் இடையே பாகப்பிரிவினை ஆகிவிட்டதா எ ன்றால் எனக்கு தெரியாது..

3. நான் முதலில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூபாய் இரண்டரை இலட்சம் கொடுத்தேன். எனது ஊர் திருமக்கோட்டை காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்டதா . நான் மேற்படி தொகையை கொடுக்கும்போது தங்கபிரகாசம் என்பவர் உடனிருந்தார் . இந்த நிலத்தை வா ய்மொழியான அ னுபவத்திற்க பெற்றேன். நான் மேற்படி தொகையை வங்கியிலிருந்து எடுத்துக்கொடுத்தேன். நான் 2015 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 அல்லது 2 ம் தேதியில் அந்த பணத்தை கொடுத்தேன்.

4. நான் வேறு நிலங்களில் கிரய ஒப்பந்தம் செய்து அதற்குண்டான கிரய ஆவணத்தினை பதிவு செய்தேனா என்றால் சரிதான். நான் கொடுத்த தொகை பெருந்தொகை என்பதால் ஏன் அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் வாதி எனது சித்தப்பா பையன் என்பதால் எழுதிக்கொள்ளவில்லை..

5. வட்டி தொழில் செய்வதற்கு என்னிடம் லைசன்ஸ் இல்லை என்ற சொன்னால் சரிதான் . எத்தனை ஆண்டுகள் ஒத்திகுத்தகை பேசிக்கொண்டோம் என்றால் அவர் பணத்தை திரும்ப தரும்வரை பேசிக்கொண்டோம். நான் வாதியிடம் பணம் திரும்ப கேட்டேனா என்றால் இதுவரை கேட்கவில்லை. நான் வாதிக்கு மேற்படி தொகையை 3 தவணையாக கடனாக கொடுது்தேன் என்றும் அதற்கு மாதம் 3 பைசா வட்டி விகிதம் நிர்ணயித்து மேற்படி தொகையை அ சலை விட கூடுதலாக செலுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

6. நிலம் பிரச்சினை சம்மந்தமாக எங்கள் கிராமத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டதா என்றால் 2019-ல் பேசப்பட்டது. மனோகரன் தலைமையில் பஞ்சாயத்து பேசப்பட்டது . மேற்படி பஞ்சாயத்தில் இடத்தை பஞ்சாயத்தார்கள் வாதி மேற்படி இடத்தை எனக்கு பதிவு செய்யவேண்டும என்று கூறினார்கள். அதற்கு வாதி தரப்பில் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7. நான் சொல்வது போல் எந்தவித பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . நான் அடியாட்களை அழைத்து வாதியை மிரட்டி எழுதப்படாத முத்தி'ரைத்தாளில் கையொப்பம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல . காவல்நிலையத்தில் புகார் கொடுத்தால் வாதியை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல.

8. நான் வாதியை தாக்கியதாக சொல்லி என்மீது புகார் கொடுக்கப்பட்டு அதன் நான் முன் பிணையில் வெளியில் வந்தேன் என்ற சொன்னால் சரிதான் . நான் மேற்படி ஒத்திகுத்தகை பத்திரம் எழுதியபிறகு தான் மேற்படி புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான் . வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினார் என்று சொன்னால் சரிதான் . அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான் . அதன்படி தாவா சொத்தினை அக்ரிமெண்ட் எழுதிக்கொடுத்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் சரிதான்.

9. மேற்படி ஆவணத்தில் யார் யார் எல்லா ம் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சுப்ரமணியன் மகன் ராஜேந்திரன் , கணேசன் மகன் குமார் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். மேற்படி ஆவணத்தினை பெருகவாழ்ந்தானை சேர்ந்த ஒரு அம்மா எழுதிக்கொடுத்தார். எழுதிய பெண்ணின் பெயர் தெரியாது. பெருகவாழ்ந்தான் கிராமத்திற்கும் எங்கள் கிராமத்திற்கும் எத்தனை கிலேபா மீட்டர்உ ளள்து என்றால் 7 கிலோ மீடடர் உள்ள . மேற்படி பத்திரத்தில் எழுதியதும் தான் தான் என்று அந்த அம்மா தனது கையொப்பத்தை செய்தாரா என்றால் இல்லை.

10. மேற்படி பத்திரத்தை பெருகவாழ்ந்தானில் உள்ள அந்த அம்மாவீட்டில் வைத்துதான் எழுதினோம். அந்த அம்மாவிற்கு 70 வயது இருக்கும். அந்த பத்திரத்தை அவங்ககிட்டதான் வாங்கினோம். அ வங்க வீட்டில்தான் எழுதினோம். பத்திரத்தை என்றைக்கு வாங்கினோம் என்றைக்கு எழுதினோம் என்றால் அன்றைய தினமே வாங்கி அன்றைய தினமே எழுதினோம். மேற்படி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் சயெ்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்ற சொன்னால் சரியல்ல.

11. நான் இந்த வழக்கில் தங்கபிரகாசம் , சாரங்கபாணி, குமார், ராஜேந்திரன் ஆகியோர்களை எனது தரப்பு சாட்சிகளாக விசாரிக்க உள்ளேன் . நான் சொன்ன சாட்சிகள் அனைவரும் வாதிகுடும்பத்தில் நீண்ட காலமாக விரோதமாக உள்ளார்கள்எ ன்று சொன்னால் சரியல்ல.

12. கிராம நிர்வாக அலுவலர் எனக்கு கொடுத்த சான்றின் அடிப்படையில் பயிர் காப்பீடுசெய்து அதில் மேற்படி காப்பீடு பெற்றேன் என்று சொன்னால் சரிதான் . எ வ்வளவு தொகை பெற்றேன் என்றால் தெரியாது. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. அதில்தான் மேற்படி பணம் போடுவார்கள். மேற்படி பயிர்காப்பீடடில் எனக்கு உரிய இதர சொத்துக்களையும் சேர்த்து தான் காப்பீடு செய்தேன் என்று சொன்னால் சரிதான். அதனால் எனக்கு காப்பீட்டு தொகை ஒட்டுமொத்தமாக கிடைத்தது என்று சொன்னால் சரிதான்.

13. கிராம நிர்வாக அலுவலர் எனக்கு கொடுது'த சான்றை நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி அதாவது நான் ல ஞ்சம் கொடுத்து பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல . மேற்படி கிராம ்நிர்வாக அலுவலரை நான் விசாரிக்கபோகிறேன் என்று சொன்னால் ஆம் விசாரிக்கபோகிறேன். திருமக்கோட்டை காவல்நிலயத்தில் முத்துக்காமாட்சி என்ற உதவி

ஆய்வாளர் இருந்தார் என்றால் இருந்தார் . அவரும் இந்த வழகு்கு சொத்து சம்மந்தமாக பஞசாயத்து பேசினார் என்று சொன்னால் சரிதான் . மேற்படி முத்து காமாட்சிதான் வாதியை தாக்கிய வழக்கில் எனக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான் . மேற்படி காவல்நிலையத்தில் பஞ்சாயத்து பேசியது தொடர்பாக எனக்கு மனு ரசீது கொடுத்தார்கள்.

14. வாதி தான் என் மீது எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தார் . நான் தான் மேற்படி காவல் உதவி ஆய்வாளர் முத்துகாமாட்சிக்கு நான் லஞ்சம் கொடுத்து அதன்பிறகு வாதி மீது புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வாதி ஆனவர் நிலையம் அழைத்து வரப்பட்டு அவரை மிரட்டி அவர் வீட்டிலிருந்த மூலப்பத்திரங்களை மேற்படி முத்துகாமாட்சி வாதியிடமிருந்து பெற்று என்னிடம் ஒப்படைத்தார் என்று சொன்னால் சரியல்ல.

15. மேற்படி உதவி ஆய்வாளர் முத்துகாமாட்சி என்னிடம் லஞ்சம் பெற்றக்கொண்டு வாதி கொடுத்த புகாரை முறையாக விசாரிக்காமல் எனக்கு ஆதரவாக ஒரு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து அதனை ஏற்றுக்கொள்ளாமல் வாதி தனிநபர் முறையீடு செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல . வாதி கொடுத்த வழக்கில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபராக ஆஜராகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

16. வாதி என்னிடம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தை பொறுத்து இந்நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் என்னுடைய மோசடி தெரிந்துவிடும் என்பதால் அதை தாக்கல் செய்யவில்லை.

17. நான் மோசடியாக பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் நான் இடைஞ்சல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். நாளது தேதி வரை தாவா சொத்தில் வாதி தான் அனுபவத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல . எனக்கு த ாவா சொத்தில் எந்தவிதமான சட்டஉரிமையும் இ ல்லை என்றாலும், நான் சட்டவிரோதமான ஆவணங்களை தயாரித்து மோசடியாக ஆவணம் புனைந்து அதன் அடிப்படையில் வாதிக்கு தொல்லை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

18. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யான து என்று சொன்னால் சரியல்ல.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

*(Sd/- A.S. Ameerdheen)*
District Munsif
Mannargudi.